மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்
அசல் வழக்கு எண்.67-2022
நாள்: 19.09.2025

Deposition of Witness D.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜாராமன் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த தாவாவின் பிரதிவாதி ஆவேன். எனது சாட்சியத்தை நான் நிரூபண பிரமாண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். 24.09.2009 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.1**. பட்டா மாற்றுவது பொறுத்து ஏற்பட்ட பஞ்சாயத்து முடிவு அசல் **பி.வா.சா.ஆ.2**. 20.03.2009 தேதியிட்ட பட்டா மாற்றுவது பொறுத்து முதல் பிரதிவாதிக்கு தாசில்தார் அனுப்பிய நோட்டீஸ் அசல் **பி.வா.சா.ஆ.3**. 06.04.2009 தேதியிட்ட பட்டா மாற்றுவது பொறுத்து முதல் வாதிக்கு அனுப்பி முதல் பிரதிவாதியிடம் கொடுத்த தாசில்தார் நோட்டீஸ் **பி.வா.சா.ஆ.4**. 24.06.2009 தேதியிட்ட பட்டா மாறுதல் செய்ய தாசில்தார் பிறப்பித்த உத்தரவு அசல் **பி.வா.சா.ஆ.5**. தாசில்தார் புதிய பட்டா நம்பர்கள் வழங்கிய உத்தரவும் கம்ப்யூட்டர் சிட்டாவும் சான்று நகல் **பி.வா.சா.ஆ.6**. 12.05.2009 தேதியிட்ட முதல் பிரதிவாதி பட்டா மாற்றம் செய்ய இலவச சட்ட உதவி மையத்திற்கு கொடுத்த மனுவிற்கு வந்த பதில் அறிக்கை அசல் **பி.வா.சா.ஆ.7**. .05.2013 தேதியிட்ட முதல் வாதி பட்டா மாற்றம் செய்வதை ஆட்சேபணை செய்து RDO-விடம் அப்பீல் செய்து முதல் பிரதிவாதிக்கு வந்த நோட்டீஸ் அசல் **பி.வா.சா.ஆ.8**. 20.05.2013 தேதியிட்ட முதல் வாதி பட்டா மாற்றத்தை எதிர்த்து பஞ்சாயத்து தலைவர் மற்றும் ஒன்றிய கவுன்சிலருக்கு அனுப்பிய புகார்கள்(2) அசல் **பி.வா.சா.ஆ.9**. கிஸ்தி இரசீதுகள் 3 அசல் **பி.வா.சா.ஆ.10**. தாவா சொத்துக்களுக்கு இன்சூரன்ஸ் தொகைகள் பெற்றதைக் காட்டும் கூட்டுறவு வங்கி பாஸ் புத்தகங்கள் (3) அசல் **பி.வா.சா.ஆ.11**. தாவா சொத்துக்களுக்கு

இன்சூரன்ஸ் பிரீமியத் தொகைகள் நேரடியாகவும் மற்றும் Online மூலமாகவும் செலுத்தியதற்கான இரசீதுகள் (4) அசல் **பி.வா.சா.ஆ.12**. இந்த பிரமாண பத்திரத்தை ஏற்று அசல் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது